# மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசமும் யுத்தத்திற்குப் பின்னரான சூழலும் - சமூகவியல் நோக்கிலான ஆய்வு

த.மேகராசா
மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.
megarajaht@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான் கரைப் பிரதேசத்தின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திகள், சமூக சூழ்நிலைகள் பற்றி எடுத்துக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். படுவான்கரைப் பிரதேசம் மொழி வழக்கு, பண்பாடு, கலை, கலாசார பாரம்பரியங்கள், சடங்கு முறைகள் சார்ந்து தனித்துவமானதாகும். யுத்தம் நிலவிய காலத்தில் த.வி.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசம் 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பூரணமாக மீட்கப்பட்டது. இப்பிரதேசத்தின் யுத்தத்திற்கு முன்னரான சூழலும் பின்னரான சூழலும் வேறு வேறானவையாகும். யுத்தத்திற்குப் பின்னர் பாலம் அமைத்தல், பிரதேச சபைக் கட்டடங்கள், மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்கள், வீட்டுத்திட்டங்கள் என குறிப்பிடத்தக்க அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பதனால் இவ் அபிவிருத்தித்திட்டங்கள் மேலும் முன்னெடுக்கப்படவேண்டிய தேவை உள்ளது. மண்முனைப் பால அமைவு மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்துள்ளபோதிலும் படுவான் கரைப் பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டு, ஒழுக்க, விழுமியங்கள் சீர்குலைந்துவிடும் என்ற எண்ணம் இப்பிரதேசத்திலுள்ள 75சத வீதமான மக்களிடம் உண்டு. யுத்தகாலத்திற்குப் பின்னரான சமூகச் சூழல்பலவகையிலும் சிக்கலுள்ளதாகவே மாறியுள்ளது. மது அருந்தும் பழக் கத்திற்கு ஆட்படும் நிலை அதிகரித்துள்ளதுடன் தவ றான இணையப் பாவனை காரணமாக ஒழுக்கச் சீர் கேடுகளும் மேலோங்கிக் காணப்படுகின்றன. பெண் களின் வெளிநாட்டுப் பயணமும் சிக்கலுள்ளானதாகவே காணப்படுகின்றது. யுத்தகாலத்தில் கல்வியையும் பொரு ளாதார வளத்தினையும் இழந்த மக்கள் இன்று கூலித் தொழிலாளர்களாக தொழில்தேடி அலைய வேண்டிய நிலையும் தற்போது காணப்படுகின்றது. இச்சூழ்நிலை யினை இவ்வாய்வினூடாக எடுத்துக் கூறுவதனால் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில் படுவான்கரைப்பிரதேச மக்களின் நிலை, அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் என்பவை பற்றிய புரிதலை எட்டமுடியும்.

**திறவுச் சொற்கள் -** படுவான்கரை, கூலித் தொழிலாளர்கள், அபிவிருத்தி முன்னெடுப்பு

## 1. ஆய்வு அறிமுகம்

உலக அளவில் யுத்தங்கள் ஏற்படுவதும் பின்னர் புனரமைப்புக்களும் மீள் நிர்மாணங்களும் ஏற்படுவதும் இயல்பானதாகும். இலங்கையில் முப்பது வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்துகொண்டிருந்த யுத்தம் 2009 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்துள்ளது. யுத்தகால வாழ் வுக்குள் சிக்கித் தவித்த மக்களுக்கு இன்று அச்சூழல் இல்லாமல் போயுள்ளது. இன்றைய சூழலில் அரசாங்கம் தன்னுடையதும் வெளிநாடுகளின் உதவியுடனும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகி றது. அரசசார்பற்ற நிறுவனங்களும் அபிவிருத்திப் பணி களையும் சமூக வலுவூட்டல்களையும் மேற்கொண்டு வருகின்றன. இது மிக முக்கியமானதாகும் அதேவேளை யுத்தச் சூழலில் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வாழ்ந்து வந்த மக்கள், உலக நடத்தைகள், வெளித்தொடர்புகள் என்பனவற்றுடன் தொடர்புகளைப் பெறுகின்றபோதும் தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டை அனுபவிக்கின்ற போதும் அவர்களிடம் மாற்றமேற்படுவது இயல்பானதாகும்.

### ஆய்வுப் பின்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவான்கரை – படுவான் கரை என இரு பெரும் பிரதேச கூறுகள் உண்டு. மண் முனை வாவியினை அடிப்படையாக வைத்தே முன் னோர்கள் இப்பெயரினை வழங்கி வந்துள்ளனர். இவ் வகையில் மண்முனை வாவிக்குக் கிழக்கே உள்ள பகுதி

எழுவான் கரையாகவும் மேற்குப் பகுதி படுவான் கரை யாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.




கிராமங்களையும் வயல்வெளிகளையும், மேய்ச்சற் தரைகளையும் காடுகளையும், மலைகளையும் குளங்கள் மற்றும், ஆறுகளையும் கொண்ட வளம்மிக்க பிரதேச மாக படுவான்கரைப் பிரதேசம் அமைந்துள்ளது. இப்பெரு நிலப்பரப்பில் போரதீவுப் பற்று (வெல்லாவெளி), மண் முனை தென்மேற்கு (பட்டிப்பளை), மண்முனை மேற்கு (வவுணதீவு) ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவு களைச் சேர்ந்த கிராமங்களையும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரிய புல்லுமலை, கோப்பாவெளி, உறுகாமம், கரடியனாறு, கித்துள், மரப்பாலம், பன்குடா வெளி, வேப்பவட்டுவான், குடும்பிமலை ஆகிய கிராமங் களையும் உள்ளடக்கிய பெரு நிலப் பகுதியாக இப்பிரதேசம் அமைந்துள்ளது. 2013 இல் மட்டக்களப்பு மாவட்டச் செயல கத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரவியல் தகவல்களின் படி படுவான்கரைப் பிரதேசத்தின் சனத்தொகை 112722 ஆகும்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், தாந்தாமலை முருகன் ஆலயம், பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், போரதீவு காளிகோவில், கோரா வெளி கண்ணகி அம்மன் ஆலயம் முதலான புகழ்பெற்ற இந்து ஆலயங்கள் இப் பிரதேசத்திலேயே உண்டு. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மொழி, சமயம், பண்பாடு, சமூக அமைப்பு, வாழ்க்கை முறை சார்ந்து தனித்துவமானதொரு பிரதேசமாகவும் இப்பகுதி விளங்குகின்றது. படுவான் கரைப் பிரதேசமானது யுத்த காலத்தில் த.வி.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதனால் மீட்கப்படாத பிரதேசம் (Uncleared area) என்றும் அரசாங்கத்தால் அழைக்கப் பட்டு வந்தது. போர்க்காலத்தில் கூடுதலான உயிர் இழப்புக் களையும், பொருட்சேதங்களையும் இப்பிரதேச மக்கள் சந்தித்திருந்தனர்.

**ஆய்வுக்கான நியாயப்பாடுகள்.**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது அவசியமானதாகும். அவ்வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எனினும் மேலும் பல அபிவிருத் தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இவ்வாய்வு அவசிய மாகின்றது.

அபிவிருத்தித் திட்டங்களினால் மட்டும் நிலையான, எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய , பண்பாட்டு ஒருமைப்பாட்டுடன் வாழக்கூடிய சமூகத்தை உருவாக்க முடியாது. மக்களின் மனங்களில் மாற்றமேற்படுதல் அவசி யமானதாகும். அதற்கு இவ்வாய்வு வழிகாட்டுவதாக உள்ளது.

**2. ஆய்வின் நோக்கங்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான் கரைப் பிரதேசத்தின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திகள், சமூக சூழ்நிலைகளை எடுத்துக் கூறி, இன்று ஏற்பட்டுள்ள ஆரோக்கியமற்ற சூழ்நிலைகளுக்கு ஏற்புடைய சாத்தியப் பாடுகளை முன்வைப்பது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இது தவிர படுவான்கரைப் பிரதேசத்தின் யுத்தத்தின் பின்னரான சூழலை பொதுத் தளத்துக்குக் கொண்டு செல்வதும் அதற்கான பரிகாரங்களை மேற்கொள்வதற்கு வழிவகுப்பதும், ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன.

**3. ஆய்வு முறையியல்**

ஆய்வுக்கான அடிப்படைத்தரவுகள் கள ஆய்வுகளின் மூலம் பெறப்பட்டவையாகும். ஆய்வாளர் படுவான் கரைப் பிரதேசத்தினைச் சேர்ந்தவர் என்பதனால் இவ் விடயம் சார்ந்த அவதானிப்பு ஏற்கனவே இருந்தது. ஆனாலும் இவ்வாய்வின்பொருட்டு படுவான்கரைப் பிரதேசப்பகுதி களுக்கு சென்று அங்குள்ள மக்கள், உள்ளூர் சமூக மட்ட அமைப்புக்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் முதலானோரிடம் தகவல்கள் பெறப்பட்டு அவை குறித்தெடுக்கப்பட்டதுடன் பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம் என்ப வற்றின் தகவல்களையும் திரட்டி அவற்றினை ஒப்பிட்டு யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திகள், சமூக சூழ் நிலைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு விடயமாக அணுகப்பட்டு தரவுகள் மூலம் தெளிவுபடுத்தப் பட்டு சாத்தியப்பாடுள்ள வழிமுறைகளும் முன்மொழி யப்பட்டுள்ளன.

ஆக இவ்வாய்வு தரவுகளைத்திரட்டுதல் அவற்றி னைப் பகுப்பாய்வு செய்தல், நிலைப்பாடுகளையும் தீர்மா னங்களையும் முன்வைக்கும் ஆய்வு முறையியலின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**4. யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திகள்.**

ஈழத்தில் போர் ஓய்ந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. போருக்குப் பின்னரான சூழலில் துரித அபிவிருத்தி பற்றியதாகவே அரசாங்கத்தின் பேச்சுக்களும் செயற் பாடுகளும் அமைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின் 'கிழக்கின் உதயம்' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாலங்கள், வீட்டுத்திட்டங்கள், கட்டடங்கள், மின்சார இணைப்புக்கள், கல்வி அபிவிருத்தி எனப் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ் அபிவிருத்தித் திட்டங்கள் மேலும் பலமாக முன்னெடுக்கப்படவேண்டிய தேவை இப்பிரதேசத்தில் அதிகமாக உண்டு. ஏனெனில் தற்போதைய நிலையில் சமூக சீரழிவுகளும் வறுமையும் தலைவிரித்தாடும் ஒரு பிரதேசமாக இப்பிரதேசம் காணப் படுகின்றது.

**பாலம் அமைப்பு - மண்முனைப்பாலம்**

மிக நீண்ட காலமாக படுவான்கரைப் பிரதேசத்திற்கும் எழுவான்கரைப் பிரதேசத்திற்கும் இடையிலான போக்குவரத்து, மண்முனை வாவியின் ஊடாகவே அமைந்திருந்தது. ஆரம்ப காலங்களில் மரத்தினாலான ஊன்று பாதையே பயன்படுத்தப்பட்டது. பின்னர் இயந்திரம் பூட்டப்பட்ட பாதைப் போக்குவரத்து இடம்பெற்றது. 1986 ஆம் ஆண்டு வரை பெருந்தெருக்கள் திணைக்களம் நடத்தி வந்த பாதைப் போக்குவரத்தினை 1990 முதல் வீதி அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பேற்று நடத்தியது.



யுத்த சூழலால் இரண்டு வருடங்கள் தடைப்பட்டிருந்த பாதைப் போக்குவரத்து பின்னர் 1992 இல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வீதி அபிவிருத்தித் திணைக் களத்தினால் நடத்தப்பட்டது. 1993 இல் இருந்து இரண்டு பாதைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஏப்ரல் வரை இலவச சேவையே இடம்பெற்றது.

படகுகள் மூலம் போக்குவரத்துச் செய்யும் நிலை காணப்பட்ட காலங்களில் 30 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். இவர்களில் பட்டிப்பளைப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ஜெயதரன் என்பவர் பயணம் செய்த படகு விபத்துக்குள்ளானமை காரணமாக 1991 ஆம் ஆண்டு இறந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். 2012 இல் பட்டிப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியை குழந்தைப் பேற்றின் பொருட்டு அம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் பாதையில் ஏற்றி மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது ஆற்றின் நடுப்பகுதியில் வைத்து அப்பெண் குழந்தையைப் பிரசவித்த பரிதாப நிலையும் இடம்பெற்றது. படுவான் கரைப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் போக்குவரத்து நிலைமை சார்ந்து நோக்கும்போது யுத்தத்திற்குப் பின்னரான அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்பில் மண் முனைப் பால அமைப்பு முக்கியமான மைல் கல்லாகும்.

இந்த பால அமைப்புப் பற்றி நோக்கும்போது 1983 இல் செல்லையா இராசதுரை பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது நிதி ஒதுக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டாலும் பாதுகாப்பு அமைச்சு அப்போது அனுமதி வழங்காமை காரணமாக நிறுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு பாலம் அமைக்கும் பணி தொடங்கி 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி மக்களின் பாவனைக்கு இப்பாலம் விடப்பட்டது. 210 மீற்றர் நீளம் கொண்ட மண்முனைப்பால அமைவுக்கு ஜப்பானின் 1473 மில்லியன் ரூபாவும் இலங்கை அரசின் 393 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன.

பாலம் திறந்ததன் பின்னர் வாவியின் இரு மருங்கிலும் பாதைக்காக மணித்தியாலக் கணக்கில் காத்துக்கிடக்கும் நிலைமாறி போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச பணியாளர்கள் நேரத்துக்குப் பணிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. தவிர யாவரும் எப்போதும் வந்து செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

**கட்டடங்கள்**

கற்றல் விருத்திக்குப் பாடசாலைச் சூழல் முக்கியமானதாகும். யுத்தகாலத்தில் சிதைவடைந்து அழகற்றுக் காணப்பட்ட பாடசாலைகள் பல இன்று சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பழுகாமம் கண்டு மணி மகாவித்தியாலயம், அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயம், முதலைக்குடா மகா வித்தியாலயம், கன்னன்குடா மகா வித்தியாலயம் ஆகிய பாடசா

லைகளில் மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பல பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளதைப் போன்று படுவான்கரைப் பிரதேசத்திலும் மூன்று பிரதேச சபைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**வீட்டுத்திட்டங்கள்**

அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியினால் தற்போது படுவான்கரைப் பிரதேசத்தில் வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களும் அடங்கும். ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் போதியளவு நிதியின்மையால் பூரணப்படுத்தப் படாமலேயே இருக்கின்றன.

**மின்சார இணைப்பு**

யுத்த காலத்தில் இருள் நிறைந்து காணப்பட்ட பெரும் பாலான பிரதேசங்கள் இன்று ஒளியுடன்காட்சியளிக்கின்றன. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் 2014, யூன் மாதம் வெளியிட்ட தகவலின்படி மாவட்டத்தில் தொண்ணூறு வீதமான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. படுவான் கரைப் பிரதேசத்தில் ஊர்களுக்குள் உள்ள சில வீதிகளுக்கே மின்சாரம் வழங்கவேண்டிய தேவை உள்ளது. இவ்வகையில் இரவுகளில் தீ மூட்டியும், மண்ணெண்ணை விளக்குகளிலும் ஒளியேற்றி வாழ்ந்த காலம் கழிந்திருக்கிறது. அத்துடன் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கு மின்சார உபகரணங்களை உபயோகிக்கும் நிலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஊர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் படுவான்கரைப் பிரதேசத்தில் ஐம்பது வீதமான குடும்பங்கள் மின்சார இணைப்புக்களைப் பெறுவதற்கு வசதியற்ற நிலையில் காணப்படுகின்றனர். இத்தன்மை முறையற்ற விதத்தில் மின்சாரத்தினைப் பயன்படுத்தும் நிலைக்கும் வழி வகுப்பதாக உள்ளது. மின்சாரம் பெறுவதற்குரிய வசதி வாய்ப்பற்ற குடும்பங்களை இனங்கண்டு சமூக நிறுவனங்களும் உதவுனர்களும் அத்தகைய மக்களின் வாழ்வியல் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு முன்வருவது காலத்தின் தேவையாகும்.

**5. யுத்தத்திற்குப் பின்னரான சமூக - பண்பாட்டுச் சூழல்**

**பண்பாட்டுக் குலைவு**

படுவான்கரைப் பிரதேசம் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். இங்கே கூடுதலாக சைவக் கோயில்களும் அதனுடன் இணைந்த சடங்கு வழிபாட்டு மரபுகளுமே பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தனித்துவமான ஒருமைப்பாடுடைய சமூக இயங்கு நிலைகளைக் கொண்ட பிரதேசமாக இப் பிரதேசம் இருந்து வந்துள்ளமையினால் அந்நிலையே தொடர வேண்டுமென்பது இங்கு வாழும் மக்களின் எண்ணமாகும். எழுவான் கரையினையும் படுவான் கரையினையும் இணைக்கும் மண்முனைப்பாலத்தின் தேவை மிக அவசியமானதாக இருந்தபோதிலும் ஆரம்பத்திலிருந்து படுவான்கரைப் பிரதேச மக்கள் பாலம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்து வந்தமைக்குக் காரணம் பாலம் அமைக்கப்படுமாயின் தமது பண்பாட்டு, பாரம்பரிய நடைமுறைகளும் தனித்துவங்களும் கெட்டுவிடும் என்று கருதியே ஆகும்.

இன்று மண்முனைப் பாலம் அனைத்துச் சமூகத்தினரும் எந்நேரத்திலும் வந்து இரவிலும் தங்கிச் செல்லக் கூடிய சூழலைத் தோற்றுவித்துள்ளது. போக்குவரத்து நிலை சார்ந்து இது தவிர்க்கமுடியாத நிலையாகும். எனினும் வர்த்தக நோக்கம் கருதி இப்பிரதேசத்திற்கு வருகின்ற இப்பிரதேச மக்களிடமிருந்து வேறுபட்ட இனக் குழுமத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் கணவன் இல்லாத (யுத்தத்தில் கணவனை இழந்த அல்லது தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள) பெண்களின் வீடுகளில் தங்குவதும் பாலுணர்வுத் தொடர்புகளை வைத்துக்கொள்வதும் குடும்ப வறுமை, சமூக ரீதியாக ஏற்படும் முரண்நிலையை அறியாமை காரணமாக குறிப்பிட்ட பெண்கள் அந்நிலைக்கு உட்படுவதுமான நிலை அதிகரித்துள்ளது. இந்நிலை சமூக முரண்பாட்டைத் தோற்றுவிக்கத்தக்கதாகவும் காணப்படுகின்றது.

யுத்த காலத்திற்கு முன்னர் இப்பிரதேசத்தில் முஸ்லிம் சமூகத்தினருக்கும் குறிப்பிட்ட இடங்களில் காணிகள் இருந்துள்ளன. யுத்தகாலத்தில் இப்பிரதேசத்திற்கு முஸ்லிம் சமூகத்தினர் வரமுடியாத சூழல் காணப்பட்டமையினால் பெரும்பாலான காணிகள் இப்பிரதேசத்திலுள்ள தமிழர்களால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளன. சிலரது காணிகளே விற்பனை செய்யப்படாமலிருந்தன. இன்று விற்பனை செய்யப்பட்ட காணிகளையும் மீண்டும் உரிமையாக்கிக் கொள்ள முஸ்லிம்கள் சிலர் முனைவதால் முரண்பாடுகள் ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இந் நிலையினை மண்முனைப்பாலம் மேலும் அதிகரித்துள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்திற்கு வருகின்ற நகர்ப்பகுதியைச் சார்ந்தவர்கள் தமக்கோர் நிலப்பரப்பினை படுவான்

கரைப்பகுதியில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுவதும் காணிகளை விற்க முனைபவர்களிடம் விலையாகப் பெற முயல்வதுமான நிலை காணப்படு கின்றது. வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள் படுவான்கரைப் பிரதேசத்தில் காணிகளை வாங்குவதை அங்குள்ள மக்கள் விரும்பவில்லை. தம்மிலிருந்து வேறுபட்ட இனக் குழுமத்தைச் சார்ந்தவர்கள், காணிகளை வாங்கிக் குடி யேறுவார்களாக இருந்தால் பிரதேச தனித்துவம் கெட்டு விடும் என்று கருதுகின்றனர்.

படுவான்கரைப் பிரதேசத்தின் பிரதான பகுதியாக கொக் கட்டிச்சோலையே காணப்படுகின்றது. படுவான்கரைப் பிரதேசத்தில் கூடுதலான கடைத் தொகுதியைக் கொண்ட இடமும் இதுவே ஆகும். இங்குள்ள கடைகள் அனைத் தும் தமிழர்களுடையவை. அத்துடன் புகழ்பெற்ற தான் தோன்றீஸ்வரர் ஆலயம் இங்கேயே இருப்பதனால் இங்குள்ள கடைகள் எவற்றிலும் மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதில்லை. இது அங்குள்ள சம்பிரதாயமும் உள்ளூர் சமூகச் சட்டமுமாகும். ஆதலால் வேறு சமூக த்தைச் சார்ந்தவர்களுக்கு நிலத்தினை விற்பதையோ அல்லது கடையினை வாடகைக்கு விடுவதையோ படு வான்கரைப் பிரதேசத்திலுள்ள இந்து தத்துவ சமூ கத்தினர் விரும்பவில்லை. ஆக, பண்பாட்டு மரபுகளைப் பேணியும் அதனூடாக தமிழர் அடையாள தனித்து வத்தினைப் பேணியும் வந்த படுவான்கரைப் பிரதேசத்தில் மண்முனைப் பாலத்தினூடாக வரும் பல் சமய கலாசார பண்பாட்டாளர்களின் தொடர்பு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதும் இங்குள்ள பெரும்பாலான மக்களின் கருத்தாக உள்ளது.

மண்முனைப் பாலத்தின் கட்டுமானப்பணிகள் நடை பெற்றுக்கொண்டிருந்தபோது கலாசாரமும் பொருளாதார வளங்களும் எவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் என்பது தொடர்பாக துண்டுப்பிரசுரங்களும் மேடைப் பேச்சுக்களும் இடம்பெற்று வந்தன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களும், மண்முனைப் பாலத் திறப்பு விழாவின்போது உரையாற்றுகையில் படுவான்கரைப் பிரதேச மக்களின் கலாசாரங்களும் பண்பாடுகளும் பாதுகாக்கப்படுவதில் தான் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கதாகும். இந்நிலையில் பண்பாட்டுத் தனித் துவத்துடன் வாழும் படுவான்கரைப் பிரதேசமக்களின் இயல்புநிலை பேணப்படுவதில் யாவரும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**மதுப்பழக்கம்**

யுத்த காலத்தை விடவும் தற்போது சமூக சீர்கேடுகளும் கூடுதலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. 2014 இல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வெளியிட்ட தகவலின் படி 54 மதுபானசாலைகள் உள்ளதுடன் ஒரு மாதத்தில் 200 மில்லியன் ரூபா மதுபாவனைக்காகவும் செலவிடப் படுகின்றது. இத்தகவலின் அடிப்படையில் இலங்கையில் மதுபானங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்படும் இடமாக மட்டக்களப்பு மாவட்டமே உள்ளதென்பது தெளிவு. படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள மணற்பிட்டி மதுபான சாலையில் நாளொன்றுக்கு அண்ணளவாக பத்தாயிரம் மதுபான போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இளைஞர்கள் மதுப் பழக்கத்திற்கு ஆட்படும் நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது.

இளைஞர்கள், சிறுவர்கள் சமூகப் பொறுப்புடை மையுடன் செயற்படுவதற்கும் மதுச் சீரழிவிலிருந்து அவர்களைக் மீட்டெடுப்பதற்குமான சமூக கட்டுமான முன்னெடுப்புக்களை குறிப்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகிய சமய சமூக நிறுவனங்களைச் சார்ந்தோர் முன்னெடுப்பது அவசியமானவையாகும்.

**நவீன தொடர்பு சாதனங்களின் தாக்கம்**

யுத்த காலத்தில் கையடக்கத் தொலைபேசி, இணையம் முதலானவற்றின் வலையமைப்பு படுவான்கரைப் பிரதேசத்திற்குக் கிடைக்காதவாறு மட்டுப்படுத்தப்பட் டிருந்தது. ஆனால் இன்று இவற்றின் பாவனை இப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது. இவற்றினால் இச்சமூகத் தினர் நன்மைகளைப் பெறுவதைவிட தீமைகளையே அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று கடன் அடிப்படையில் கையடக்கத் தொலை பேசிகளை விற்பனை செய்துவரும் ஆரோக்கியமற்ற நிலையும் காணப்படுகின்றது.

ஒவ்வொரு வீட்டிலும் ஆட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அல்லது அதைவிட அதிகமாக கையடக்கத் தொலை பேசிகள் உண்டு. இணையத்தின் பயன்பாடு சார்ந்த முகநூல், ஸ்கைப் என்பனவற்றினைத் தவறாகப் பயன் படுத்துவதன் காரணமாக தற்கொலை முயற்சிகள், குடும்ப முறிவுகள் முதலான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவை தவிர மாணவர்களின் கல்வியில் பாதிப்பினையும் குடும்பத்தில் கருத்து முரண்பாட்டினையும் ஏற்படுத்தும் ஒன்றாக தொலைக்காட்சி நாடகங்கள் காணப்படுகின்றன. ஒட்டு மொத்தமாக இவையாவும் வறுமைப்பட்ட மக்களை மேலும் வறுமைக்குள் தள்ளுவனவாகவும் சமூக சீரழிவுகளுக்கு இட்டுச் செல்வனவாகவும் அமைந்துள்ளன.

நவீன தொடர்பு சாதனங்களின் பயன்பாடு காரணமாக விபரீதங்கள் ஏற்படுவதற்கு அவற்றின் முக்கியத்துவம் பற்றிய தெளிவின்மையும் அறிவின்மையும் முக்கிய காரணங்களாக உள்ளன. இவை பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்களை பாடசாலைகளும், இப்பிரதேசத்தில் காணப் படுகின்ற கலை இலக்கிய ஒன்றியம் போன்ற அமைப் புக்களும் தொடர்ச்சியாக பலரையும் உள்வாங்கி மேற் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

**பெண்கள் வெளிநாடு செல்லல்**

பெண்கள் வெளிநாடு செல்வதனால் பிள்ளைகள் ஆதரவற்று துன்புறுத்தலுக்கு உட்படுதலும் கணவன் வேறு திருமணம் செய்தல் அல்லது வேறு பெண்ணுடன் தொடர்பை வைத்துக்கொள்ளுதல் இவற்றின் காரணமாக அக்குடும்பத்தின் இயல்பு நிலையே கெட்டுப்போவதுமான சம்பவங்கள் யுத்த காலத்தை விடவும் தற்போது அதிக மாக ஏற்படுகின்றன. மேலும் தம்மை வெளிநாடு அனுப் புகின்ற நபர்களுக்கே உழைத்துப் பணத்தினை அனுப்பு வதும் அப்பணம் பின்னர் குறித்த பெண்ணுக்குக் கிடைக் காமல் போவதுமான சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. பொதுவாக தொழில் நோக்கம் கருதிய பெண்களின் வெளிநாட்டுப் பயணம் என்பது சிக்கல் நிறைந்ததொன்றா கவே காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வறுமைப்பட்ட மக்க ளின் வாழ்வாதாரம் நிலைத்து நின்று முன்னேறி, வாழ்வ தற்கான சாத்தியப்பாடுகள் உள்ளவகையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுதலும் விழிப்புணர்வூட்டல் வழங்கப் படுவதும் இன்றியமையாததாகும். சமூக சேவைகள் அமைச்சும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இத்தகை யோர் தொடர்பில் மிகுந்த கவனமெடுத்துச் செயற்படுதல் மூலம் இப் பிரச்சினையினைக் குறைத்துக் கொள்ளலாம்.

**குடியேற்றங்கள்**

படுவான்கரைப் பிரதேசத்தில் கெவிளியாமடு, வக் கியல்ல, புளுகுனாவ முதலான எல்லைக் கிராமங் களில் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இதன் காரணமாக இப்பிரதேசத்தில் தமிழ் - சிங்கள மக்களிடையே அம்மக்கள் சார் அரசியல், மத தலைவர்களிடையே முரண்பாடுகளும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இப்பிரச்சினை தொடர்பில் படுவான் கரைப் பிரதேசத்தில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் பேசப்பட்டு வருகிறது. அரசியல் மயப்பட்ட இவ்விடயம் தொடர்பில் சட்டரீதியான அணுகுமுறைகள் முன்னெடுக் கப்படுவதுடன் சமூக புரிதலுடைய செயற்பாடுகளும் தேவையானவையாகும்.

**6. யுத்தத்திற்குப் பின்னரான கல்வி நிலை**

யுத்த காலத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர் கள், போர்களில் இணைவு, இடப்பெயர்வுகள், மாண வர்களினதும் ஆசிரியர்களினதும் தொடர்ச்சியான வர வின்மை போன்றவை காரணமாக கல்விநிலை பின்ன டைந்திருந்தது. மட்டக்களப்பு கல்வி வலயத்துடனும் பட்டிருப்பு கல்வி வலயத்துடனும் இணைக்கப்பட்டிருந்த படுவான்கரைப் பிரதேச பாடசாலைகள் பிரிக்கப்பட்டு 2010 இல் படுவான்கரைக்கான தனியான வலயமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வலயத்தின்மூலம் படுவான்கரைப் பிரதேச கல்வி அபிவிருத்தியில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவ்வலயத்திலுள்ள முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் உயர்தர விஞ்ஞானப்பிரிவு 2012 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரிவினைக் கற்கும் மாணவர்கள் விடுதியில் தங்கவைக்கப்பட்டு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவது யுத்தத்திற்குப் பின்னரான இன்றைய சூழலில் மாற்றத்திற்கான ஒரு முனைப்பு எனலாம்.

படுவான்கரைப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதி களை உள்ளடக்கிய மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத் தைச் சேர்ந்த பாடசாலைகளின் 15 வருட மாணவர்க ளின் தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**அட்டவணை -1**

| மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் | |
|---|---|
| **ஆண்டு** | **மாணவர் தொகை** |
| 2000 | 11999 |
| 2001 | 12456 |
| 2002 | 12379 |
| 2003 | 13137 |
| 2004 | 13366 |
| 2005 | 14376 |
| 2006 | 14661 |
| 2007 | 12213 |
| 2008 | 15141 |
| 2009 | 15700 |
| 2010 | 16134 |
| 2011 | 16331 |
| 2012 | 16359 |
| 2013 | 16220 |
| 2014 | 15628 |

இதன்படி யுத்தகாலத்தில் கல்வி கற்ற மாணவர்களின் தொகையிலும் யுத்தத்திற்குப் பின்னர் கல்வி கற்கும் மாண வர்களின் தொகையிலும் அதன் வளர்ச்சிப் பரம்பல் சார்ந்து பெரியளவான மாற்றங்கள் எதனையும் அவதானிக்கக் கூடியதாக இல்லை என்பது புலனாகும்.

**அட்டவணை - 2**

| வருடம் | இடை விலகிய மாணவர்கள் |
|---|---|
| 2011 | 256 |
| 2012 | 339 |
| 2013 | 443 |

இவ்வலயத்தின் முறைசாராக் கல்வி அதிகாரி வழங்கிய மேற்படி தகவல்களின் அடிப்படையில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துக் காணப்படுகின்றமையினை காணலாம். இதன்படி மாணவர்களின் இடைவிலகலுக்கு யுத்தச் சூழலே காரணம் என்று முன்மொழியப்பட்டு வந்த காரணம் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பதும் மாணவர்களின் இடைவிலகலுக்கு யுத்த சூழல் மாத்திரமன்றி குடும்ப வறுமை, பாடசாலைகளுக்குச் செல்லும் தூரம் அதிகம், கல்வியில் விழிப்படையாமை, இளவயதுத் திருமணம், ஆரம்பப் பாடசாலையில் படித்து விட்டு துாரத்திலுள்ள பெரிய பாடசாலையில் சேர்ந்து படிப்பதற்கான தயக்கமும் அச்சமும் முதலானவையும் காரணமாக அமைகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-3**

| உயர்தரம் கலைப்பிரிவு | |
|---|---|
| **வருடம்** | **பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் வீதம்** |
| 2010 | 61.6% |
| 2011 | 55.0% |
| 2012 | 33.0% |
| 2013 | 47.7% |

**அட்டவணை -4**

| க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை | | | |
|---|---|---|---|
| வருடம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | உயர்தரம் கற்ப தற்குத் தகுதி பெற்றோர். | சித்தி வீதம் |
| 2010 | 498 | 183 | 36.7 |
| 2011 | 659 | 362 | 54.9 |
| 2012 | 674 | 300 | 44.5 |
| 2013 | 695 | 275 | 39.6 |

இவ்வகையில் நோக்குமிடத்து யுத்தத்திற்குப் பின்னரான ஐந்து வருட காலத்தில் பாடசாலைகளுக்கான பௌதிக வளங்களும் ஆசிரிய ஆளணியினரும் முன்னரைவிட குறிப்பிடத்தக்க அளவு வழங்கப்பட்டுள்ளதே தவிர கல்வி நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எட்டப்படவில்லை என்றே குறிப்பிடலாம்.

பாதிக்கப்பட்டுள்ள கல்வி நிலையினை முன்னேற்றுவதற்கு பாடசாலைச் சமூகம் மாத்திரமன்றி, சமூகத்தின் ஒத்துழைப்பும் தேவையானதாகும். எனினும் படித்த மக்கள் குறைவாகக் காணப்படும் இப்பிரதேசத்தில் வறுமையும் பெரும் பிரச்சினையாகக் காணப்படுவதனால் இதனை அடைவது மிகுந்த சவால்மிக்கதாகும். ஆயினும் விளையாட்டுக்கழகங்கள், கல்வி அபிவிருத்தி ஒன்றியங்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெற்றாரின் மன நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலான முன்னெடுப்புக்களை முன்னெடுத்தல் அவசியமானதாகும்.

### 7. யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார நிலை

#### கால்நடைகள்

காடுகளும் மேய்ச்சற் தரைகளும் நிறைந்த கால்நடைகள் வளர்ப்பதற்கு ஏற்ற பிரதேசமாக படுவான்கரைப் பிரதேசம் காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் மேய்ச்சற் தரைகள் அழிக்கப்பட்டு குடியேற்ற நோக்கம் கருதிய வீட்டுத்திட்டங்கள் உட்பட சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதேவேளை இங்கு இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகள் காணப்படுகின்றன. இவை களவாடப்படும் நிலையும் காணப்படுகின்றது. நகர்ப்பகுதிக்கு இறைச்சிக்காக கூடுதலான கால்நடைகள் இப்பிரதேசத்திலிருந்து கொண்டு செல்லப்படுகின்றன. மண்முனைப் பாலம் அமைக்கப்படுவதற்கு முன்பு 'பாதை' என்று அழைக்கப்படுகின்ற பெரிய வள்ளம் மூலமே மாடுகள் மனிதர்களுடனும் தனியாகவும் கொண்டு செல்லப்பட்டன. தற்போது பாலம் போடப்பட்டுள்ளமையினால் பாலத்தினூடாகக் கொண்டு செல்லப்படுகின்றன. இதன் காரணமாக ஆடு, மாடுகள் இலகுவாக களவாடப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. பிரதேச சபைகள் இவ்விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்ற ஆடுமாடுகளையே பிரதேசத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

#### தொழிலற்ற நிலை

இங்குள்ள மக்களின் கல்வி யுத்தகாலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக பெரும்பாலானோர் கூலித் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர். படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய மூன்று பிரதேச செயலகங்களிலும் மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாவிற்கும் குறைவாக வருமானம் பெறுகின்ற 23122 குடும்பங்கள் உள்ளதாக 2013 இல் மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மேற்கூறிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வாழுகின்ற மொத்த

குடும்பங்களில் 80.73 வீதமாகும். விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்ட இப்பிரதேசத்தில் தற்போது அறுவடை இயந்திரங்களின் பெருவரவால் அரிவாளால் வேளாண்மை அறுவடை செய்யும் நிலை அருகிவிட்டது. இயந்திரங்களின் வரவின் முன் அறுவடைக் காலங்களில் ஒவ்வொரு கூலித் தொழிலாளியும் அறுநூறு அல்லது எழுநூறு கிலோகிராம் (ஒன்பது அல்லது பத்து மூடை) நெல்லை அறுவடை செய்து கூலியாகப் பெறுவது வழக்கம். ஆனால் இன்று அறுவடைக் காலங்களில் காத்தான்குடி, ஏறாவூர் முதலான இடங்களுக்கு மேசன் தொழிலுக் காகவும் வேறு கூலித் தொழில்களுக்காகவும் குறைந்தளவு சம்பளத்துக்கு வேலை தேடியலைந்து திரியும் நிலை காணப்படுகின்றது. இன்றைய சூழலில் மிகமிக அவசரமாக கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமானது என்பதையே படுவான்கரைப் பிரதேச கூலித் தொழிலாளர் களின் இன்றைய பரிதாப நிலை எடுத்துக்காட்டுகின்றது.

**கடன் தொல்லை**

யுத்தத்திற்குப் பின்னர் கடன் வழங்கும் நிறுவனங்கள் குடும்ப பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சுய தொழிலுக்கான நுண்கடன் திட்டங்களை மேற் கொண்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஊர் ஊராகச் சென்று மக்களைக் குழுக்களாகக் கூட்டி அவர்களுக்குக் கடன்களை வழங்கி எல்லோரும் சந்திக்கும் வகையில் வாரத்தில் ஒரு நாளை நிர்ணயித்து அன்றைய நாளில் தவணைக் கட்டண அடிப்படையில் பணத்தினை அறவீடு செய்து வருகின்றனர். கடனைப் பெற்று ஏதாவதொருவகையில் செலவு செய்துவிட்டு, கடன் தொல்லைக்கு ஆட்பட்டு திண்டாடும் நிலையே இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதனால் மேலும் அதிகரிக்கும் கடன் சுமையும் குடும்ப முறிவுகளும் தற்கொலை முயற்சிகளும் இடம்பெறுகின்றன. பெறுகின்ற கடனை பயன்தரக் கூடிய வகையில் பயன்படுத்தி அதன் மூலம் முன்னேறவேண்டுமென்னும் எண்ணமும் பக்குவமும் பல மக்களிடம் இல்லாமை கவலையளிப்பதாக உள்ளது. கடன் வழங்கும் நிறுவனங்களும் பிரதேச செயலகங்களும் இவ்விடயம் தொடர்பில் கவனமெடுப்பின் மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றமேற்படும்.

**8. முடிவுரை**

யுத்தகாலத்தில் சிதைந்து போய்க் காணப்பட்ட இப்பிர தேசத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவு செழுமையைக் கொடுத்துள்ளன என்பது மறுக்க முடியாததே. எனினும் உள்வீதிகள் பல புனரமைக்கப்படவேண்டியுள்ளது. வீட்டுத்திட்டங்களும் வழங்கப்படவேண்டிய நிலை காணப்படுவதுடன் வீடுகள் திருத்தம் செய்யவேண்டிய தேவையும் உள்ளது. மக்களின் பண்பாட்டு நிலை குறிப்பாக இளம் சமுதாயத்தின் நிலைப்பாடுகள் கவலைக்கிடமாகவே உள்ளன. அதேவேளை தொழில்நிலையும் சீரற்ற தாகவே காணப்படுகின்றது. பெரும்பாலானோர் கூலித் தொழிலாளர்களாகக் காணப்படுகின்றனர். கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும் யுத்தகால கல்விச் சரிவிலிருந்து பல மடங்கு மீளவேண்டியுள்ளது. ஆக யுத்தகாலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாக படுவான்கரைப் பிரதேசம் காணப்படுகின்ற மையினால் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதுடன் உள்ளூர் சமூக நிறுவனங்கள் இளம் சமூகத்தினரை நல்வழிப்படுத்தும் செயற்றிட்டங்களை பிரதேச செயலகங்களுடன் இணை ந்து மேற்கொள்ளவும் சமூக முரண்பாட்டு நிலையி னைத் தவிர்த்து இணக்கப்பாடுள்ள இயல்பு நிலையி னையும் தோற்றுவிக்க வேண்டியது அவசியமான தாகும். இல்லையேல் படுவான்கரைப் பிரதேச மக் களின் வாழ்நிலை எதிர்காலத்தில் மிகுந்த சவால்மிக்க தொன்றாகவே மாறக்கூடிய அபாயமுள்ளது. இதனையே இவ்வாய்வும் வெளிச்சமிட்டுக்காட்டுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


[1] ஆய்வரங்கக் கட்டுரைகள், 2011, பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.

[2] புள்ளிவிபரத் தகவல்கள், 2013, மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.

[3] புள்ளிவிபரத் தகவல்கள், 2013, திட்டமிடல் பிரிவு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.

[4] மகேஸ்வரலிங்கம்.க, 2007, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், தமிழ்ச்சங்கம், கொழும்பு.

[5] மேகராசா.த(இதழாசிரியர்),2012, பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், பட்டிப்பளை.